ஓம் சரவணஜோதியே நமோ நம

வருகின்ற அரங்கன் என் முதலாம் ஆண்டு குருபூஜை நன்னாளாம் அந்த தினத்தில் அதனுடைய நிகழ்வும் அந்த காலக்கட்டங்களில் அன்பர்களின் செயல்பாடுகளும் நிர்வாகத்தின் செயல்பாடும் விழாவின் பாதுகாப்பும் அன்பர்கட்குண்டான சிறப்பும் குறித்த அருளாசி விளக்கம்

**ஆசான் அரங்கமகா ஞானியரின் குரு பூஜை அருளாசி விளக்கம்**

12.05.2025

1. அருமருந்தாகி நின்று உலகோர்க்கு
அற்புதம் நிகழ்த்துகின்ற ஆறுமுகனை வேண்டி
அரங்கன் யான் அருளாசி தன்னை வரமென
என் குருபூஜை விழாவிற்கு இனிதே

2. நிர்வாகத்திற்கும் தொண்டர் பெருமக்கட்கும்
வேண்டி வருகின்ற உலக மக்களுக்கும்
ஆசி தனை அருளுவேன் இந்தவித நன்னாளில்
சித்ரா பௌர்ணமி முழுமதி நன்னாள் போலே

3. அரங்கன் என் குருபூஜை விழாவில்
அதீதமான மக்கள் வருகை புரிந்து
அன்பர்களெல்லாம் மனம் மகிழும்படி
அந்த நன்னாளில் அரங்கன் யான்

4. பரிபூரணமாய் அன்பர்கட்கு ஆசியும்
வருகின்ற மக்கட்கு பாதுகாப்பும்
அந்த விழாவில் முதல் குருபூஜை
என்பது போலே இல்லாமல்

5. அனுபவமிக்க நிர்வாகிகளை கொண்டு நடக்கும்
மேலவர்கள் துணைபட நடக்கும்
சிறப்பான பூஜையாக அரங்கன் யான்
நிர்வாகிகளுக்கும் தொண்டர் பெருமக்கட்கும்

6. மனதுள் ஆக்கமும் ஞானமும் தந்து யானே
இந்த பூஜை விழாவை சிறப்பிப்பேன்
அன்னதனால் அப்பனே தொண்டர் பெருமக்களே
அரங்கன் யானே உங்களுக்குள் இருந்து நடத்துவதாலே

7. இந்த விழாவில் எந்த குறையும்
பிழையும் வருவதற்கு சாரமில்லை
பரிபூரணமாய் அன்பர்களை கவனிக்கும்விதமும்
அன்பர்களெல்லாம் வந்து சரணாகதி கொண்டு

8. வணங்கி செல்லும் காலமும்
இதனொடு நிர்வாகத்திலும்
விழாக்காலங்களில் மற்ற அன்பர்கள்
வெளி அன்பர்கள் வந்தாலும்

9. அவர்களுக்கு பாதுகாப்பும்
விழாவின்போது குடில் அமுதில்
எந்த குறையும் இல்லாத வண்ணம்
சுவையும் அருமருந்து போலே

10. அற்புதமும் அரங்கன் யான் நடத்தி
அன்பர்கட்கு தேவைக்கு ஏற்றவாறு
அமுதின் அளவும் ஆக்கமும்
சுவையும் கூட்டி அரங்கன் யான்

11. வருபவர்களை சிறப்புற யானே மகிழ்வித்து
அவர்கட்கு வரமும் தந்து சிறப்பித்து
அந்த விழாக்காலம் தொண்டர்கள் மூலம்
அதிசயம் நிகழ்த்துவேன் அன்னதனால்

12. வருகின்ற குரு பூஜை விழா
அரங்கன் என் சூட்சும
செயல்பாட்டின் வழிதான் நடக்க உள்ளது
அன்னதனால் நிர்வாகிகளும்

13. என் தொண்டர் பெருமக்களும்
எந்த மனசோர்வும் அடைய வேண்டாம்
அனைத்துமாக யானே இருந்து
அந்த விழாவை சிறப்பிப்பேன்

14. அதில் இயல்பான அன்பர்களின்
நாமஜெப பூஜையும் தொடர்ந்து
அன்பர்கள் செய்கின்ற
தர்மத்தின் தொண்டு பங்களிப்பு

15. சரணாகதி இதனோடு
மகா அன்னதான சேவையை
தடையற தொடர்ந்து நடத்தும்
அந்த மனப்பாங்கு இத்தனை சேவைகளும்

16. அரங்கன் என்னை மகிழ்வித்து வர
அன்னதனால் குரு பூஜை நன்னாளிலும்

யானே இருந்து அவ்விழாவை சூட்சுமமாய்
நடத்தி மகிழ்விப்பேன் ஓங்காரக்குடிலுக்கும்

17. நிர்வாகிகளுக்கும் உயர்வான சரணாகதி கொண்ட
தொண்டர் பெருமக்கட்கும் அவை நன்னாளில்
வரமும் வளமும் பெருமையும் சேர்த்து
அரங்கன் யான் அற்புதம் நிகழ்த்துவேன்

அரங்கமகான் யான் அருளிய ஆசி விளக்கம் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி